**14.01.16**

# தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### கால்நடை பல்கலை.யில் தூய்மை ஆய்வகம்




சென்னை மாதரவத்தில் உள்ள தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தில் தூய்மை ஆய்வகம் புதன்கிழமை திறக்கப்பட்டது. பல்கலைக்கழகத்தின் மைய ஆய்வகக் கட்டடத்தில் இந்த ஆய்வகம் அமைந்துள்ளது. தூய்மை ஆய்வகம் திறப்பு விழா, நிறுவனங்களுக்கு கால்நடை தொழில்நுட்பத்தினை வழங்குதல், விவசாயிகள் மேளா ஆகிய நிகழ்ச்சிகள் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தில் புதன்கிழமை நடைபெற்றன. நிகழ்ச்சியில் மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் உயிரிதொழில்நுட்பப் பிரிவின் ஆலோசகர் எஸ்.ஆர்.ராவ் பேசியது:

தொழில்நுட்பங்களுக்கும் பொதுமக்களுக்கும் எப்போதும் இடைவெளிகள் அதிகம். அந்த இடைவெளியைப் போக்கும் விதமாக மத்திய அரசின் உயிரிதொழில்நுட்பத் துறையின் சார்பில் கால்நடை மருத்துவ ஆய்வின் பயன்பாடு சார்ந்த பரிமாற்றத்தளம் என்ற அமைப்பு தமிழ்நாடு கால்நடை பல்கலைக்கழகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதன் மூலம் தரம் உயர்ந்த ஆய்வகமும், தூய்மை ஆய்வகமும் உருவாக்கப் பட்டுள்ளது. அந்த ஆய்வகங்களில் உருவாக்கப்படும் பல்வேறு புதிய தொழில்நுட்பங்கள் குறைந்த விலையில் விவசாயிகளுக்கு அளிக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் டாக்டர் திலகர் பேசியது:

கால்நடைகளை வளர்க்கும் விவசாயிகளுக்குத் தேவையான தொழில்நுட்பங்கள், உபகரணங்கள் ஆகியவற்றை குறைந்த விலையில் வழங்க வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் பல்வேறு கண்டுபிடிப்புகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

விவசாயிகளுக்கும் தொழில்நுட்பம், உபகரணங்கள் சார்ந்த தேவைகள் ஏதாவது இருந்தால் பல்கலைக்கழகத்திடம் தெரிவிக்கலாம்.

விவசாயிகளின் தேவையின் அடிப்படையில் புதிய கண்டுபிடிப்புகளை நிகழ்த்த பல்கலைக்கழகம் தயாராக உள்ளது என்று அவர் தெரிவித்தார்.

பல்கலைக்கழகத்தின் பதிவாளர் டி.ஜெ.ஹரிகிருஷ்ணன், கால்நடை நலக்கல்வி மையத்தின் இயக்குநர் பி.ஐ.கணேசன், பல்கலைக்கழக ஆராய்ச்சித் துறை இயக்குநர் எம்.பாபு உள்ளிட்டோர் நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

**சந்தைகளில் விற்பனைக்கு குவிந்த மஞ்சள், கரும்பு**



காஞ்சிபுரத்தில் பொங்கல் பண்டிகையையொட்டி சந்தைகளில் மஞ்சள், கரும்பு உள்ளிட்ட பொருள்கள் விற்பனைக்கு குவிந்தன.

காஞ்சிபுரத்தில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு கடலூர், தஞ்சாவூர், சேலம் ஆகிய மாவட்டங்களில் இருந்து கரும்புகள் விற்பனைக்கு வருவது வழக்கம்.

குறிப்பாக கடலூர் மாவட்டம், சிதம்பரத்தை ஒட்டியுள்ள சேத்தியாத்தோப்பு, சத்திரம், பத்திரக்கோட்டை, சிவந்திபுரம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து அதிக அளவிலான கரும்புகள் வருவது வழக்கம். அதேபோல், இந்த ஆண்டும் இப்பகுதிகளில் இருந்து கரும்புகள் விற்பனைக்குவந்துள்ளன.

இந்த ஆண்டு 20 கரும்புகள் கொண்ட ஒரு கட்டு ரூ. 350-க்கும், ஒரு கரும்பு ரூ. 20 முதல் ரூ. 25 வரையும் விற்பனை செய்யப்படுகின்றன. கடந்த ஆண்டு ஒரு கரும்பு ரூ. 30-க்கு விற்பனை செய்யப்பட்டது. இதுகுறித்து கரும்பு வியாபாரிகள் கூறுகையில், "கடந்த ஆண்டு ரூ. 50 ஆயிரம் மதிப்பிலான கரும்புகளை இரு லாரிகளில் கொண்டு வந்து விற்பனை செய்தோம். அப்போது, ரூ. 10 ஆயிரம் வரை லாபம்

கிடைத்தது. ஆனால், இந்த ஆண்டு நாங்கள் கொண்டு வந்த ஒரு லோடு கரும்பை விற்க முடியுமா என்று தெரியவில்லை. அரசு இலவச கரும்பு கொடுத்து விட்டதால் பொங்கல் பண்டிகையன்று அதிக கரும்பை உபயோகப்படுத்துபவர்கள் மட்டுமே எங்களிடம் வந்து வாங்குவர்' என்றனர். இதேபோல், மஞ்சள் கிழங்கும் பல்வேறு மாவட்டங்களில் இருந்து விற்பனைக்கு வந்துள்ளன. பூ விற்பனையைப் பொருத்தவரை, பூக்கடை சத்திரம் பகுதியில் வழக்கமான அளவிலான பூக்களின் வரத்து மட்டுமே உள்ளது.இதனால், பொங்கல் திருநாளின்போது பூக்களின் விலை இரு மடங்காக அதிகரிக்க வாய்ப்பு உள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

**மானிய விலையில் வேளாண் கருவிகள் வழங்கல்**

தாராபுரம் பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு மானிய விலையில் வேளாண் கருவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதுகுறித்து வேளாண் பொறியியல் துறை உதவிச் செயற்பொறியாளர் பாலசந்திரன் புதன்கிழமை வெளியிட்ட செய்தி:

தாராபுரம் வேளாண் கோட்டத்தில் வேளாண்மை இயந்திர மயமாக்கல் உப இயக்கத் திட்டத்தின் மூலமாக விவசாயிகளுக்கு வேளாண் கருவிகள் மானிய விலையில் வழங்கப்பட்டு வருகின்றன. அதன்படி தட்டுவெட்டும் கருவிகள், களையெடுக்கும் கருவிகள், தென்னை மட்டையைத் தூளாக்கும் கருவிகள், விதை விதைக்கும் கருவிகள், நெல் நாற்று நடும் கருவிகள் உள்ளிட்டவை சிறு, குறு விவசாயிகள், பெண்கள், தாழ்த்தப்பட்ட பிரிவைச் சேர்ந்த விவசாயிகளுக்கு 40 சதவீதம் மானியத்திலும் மற்ற விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்திலும் கருவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இது தொடர்பாக, விவசாயிகள் தாராபுரம் உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தில் தொடர்புகொள்ளலாம்.

**உதகை ரோஜா பூங்காவில் மலர்க் கண்காட்சிக்கான முன்னேற்பாடுகள் தொடக்கம்**

மே மாதம் நடைபெறவிருக்கும் மலர்க் கண்காட்சிக்காக உதகை அரசினர் ரோஜா பூங்காவில் கவாத்துப் பணிகள் புதன்கிழமை தொடங்கின. கோடை காலத்துக்காக உதகையில் தோட்டக் கலைத் துறை கட்டுப்பாட்டில் உள்ள அனைத்துப் பூங்காக்களும் தயார்படுத்தப்பட்டு வருகின்றன. உதகை அரசினர் தாவரவியல் பூங்காவில் மலர் நாற்றுகள் நடவு செய்யும் பணி கடந்த வாரம் தொடங்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, தற்போது ரோஜா பூங்காவைத் தயார்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. முதல் கட்டமாக ரோஜா பூங்காவில் உள்ள 4,000 ரோஜா செடிகளை கவாத்து செய்யும் பணி தோட்டக் கலைத் துறை இணை இயக்குநர் என்.மணி தலைமையில் புதன்கிழமை தொடங்கியது.

இப்பணியைத் தொடக்கி வைத்த மாவட்ட ஆட்சியர் பி.சங்கர் கூறியதாவது: உலகின் மிகச் சிறந்த ரோஜா பூங்காக்களில் உதகை அரசினர் ரோஜா பூங்காவும் ஒன்று. இந்த ஆண்டு மே மாதம் 15-ஆவது ரோஜா கண்காட்சி நடைபெறவுள்ளது. இது, கோடைக் காலத்தில் உதகைக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் அனைவரையும் கவரும் பூங்காவாக இருக்கும் என்றார்.

**தருமபுரியில் களை கட்டியது பொங்கல் விற்பனை**

பொங்கல் பண்டிகையையொட்டி, தருமபுரியில் புத்தாடை மற்றும் பொருள்கள் வாங்க மக்கள் குவிந்ததால், புதன்கிழமை விற்பனை களை கட்டியது.

தமிழர் திருநாளான பொங்கல் விழா ஜன.14-ஆம் தேதி வியாழக்கிழமை தொடங்கி 4 நாள்கள் கொண்டாடப்பட உள்ளது.

இந்த பண்டிகையையொட்டி தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி, காரிமங்கலம், பாலக்கோடு, பென்னாகரம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து புத்தாடைகள் வாங்கவும், மளிகை, கரும்பு, பானைகள் உள்ளிட்ட பொருள்கள் வாங்க பொதுமக்கள் தருமபுரி நகரில் குவிந்தனர்.

நகரில் உள்ள ஜவுளிக்கடைகள் தள்ளுபடி விற்பனை, நிச்சயப் பரிசு என நூதன விளம்பரங்கள் செய்து வாடிக்கையாளர்கள் கவர்ந்து விற்பனை செய்தன.

இதன் காரணமாக, தருமபுரி ஆறுமுக ஆசாரித் தெரு, சின்னசாமி நாயுடு தெரு, சித்த வீரப்பச் செட்டித் தெரு, முகமதலி கிளப் சாலை, கடை வீதி உள்ளிட்ட நகரின் முக்கியத் தெருக்களில் மக்கள் கூட்டம் அலைமோதியது.

அதேபோல, பொங்கல் பானைகள், கரும்பு விற்பனை மற்றும் கால்நடைகளுக்கு பயன்படுத்தும் கழுத்துக் கயிறு, மூக்கணாங் கயிறு, கொம்புகளுக்கு பூசும் வர்ணங்கள் ஆகியவற்றையும் விவசாயிகள், பொதுமக்களும் ஆர்வத்துடன் வாங்கிச் சென்றனர். மக்கள் கூட்டத்தையொட்டி, தருமபுரி நகர போலீஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டனர்.

**நெல் கொள்முதல் நிலையம் திறப்பு**

பொறையாறு அருகே இலுப்பூரில் அரசு சார்பில் அமைக்கப்பட்டுள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையம் செவ்வாய்க்கிழமை திறக்கப்பட்டது.

பூம்புகார் சட்டப்பேரவை உறுப்பினர் எஸ்.பவுன்ராஜ் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்து நெல் கொள்முதல் நிலையத்தைத் திறந்து வைத்தார். நல்லாடை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கத் தலைவர் ரவி,

திருவிளையாட்டம் தொடக்க கூட்டுறவு வங்கித் தலைவர் முரளி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**சந்தையில் கீரை விலை சரிவு ரூ.10க்கு மூன்று கட்டுகள்**

ஆர்.கே.பேட்டை : ஒரு கட்டு கீரை, 10 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வந்த நிலையில், தற்போது, 10 ரூபாய்க்கு, மூன்று கட்டுகள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

சந்தையில் விற்கப்படுவதில், குறைந்த விலையில், அதிக சத்துக்கள் நிரம்பியதாக கிடைப்பது காய்கறி, கீரை மட்டுமே. இதனால், வாரச் சந்தைக்கு வருபவர்கள், குறைந்தது இரண்டு கட்டு கீரையாவது வாங்கி செல்வது வழக்கம். ஆர்.கே.பேட்டை, நாராயணபுரம், காய்கறிகுப்பம், பீமாரெட்டியூர் உள்ளிட்ட பகுதிகளில், கீரை, முள்ளங்கி, வெண்டை, தக்காளி உள்ளிட்டவை ஏராளமாக பயிரிடப்படுகின்றன.இப்பகுதிகளில், நவம்பர் மாதம் முதல், ஜனவரி மாதம் வரை அதிக அளவில் கீரை பயிரிடப்படும். அந்த மாதங்களில், கீரைக் கட்டின் விலை 5 ரூபாயாக இருக்கும். கடந்த நவம்பரில் பெய்த கனமழையால், கீரை விளைச்சல் பாதிக்கப்பட்டது. இதனால், ஒரு கட்டு கீரை, 10 ரூபாய் என, விற்பனை செய்யப்பட்டு வந்தது. இந்நிலையில், மழையின் பாதிப்பு குறைந்து, போதுமான தண்ணீர் உள்ளதால், ஆர்.கே.பேட்டை சந்தைக்கு கீரை வரத்து அதிகரித்துள்ளது. இதனால், மூன்று கட்டு கீரை, 10 ரூபாய்க்கு விற்பனைசெய்யப்படுகிறது.

## இயந்திரம் மூலம் வேர்க்கடலை விதைப்பு

பொன்னேரி : சீரான இடைவெளி, நேர்த்தியான விதைப்பு ஆகியவற்றின் மூலம், அதிக மகசூலை பெற, இயந்திரம் மூலம் வேர்க்கடலை விதைக்கப்பட்டு வருகிறது.

மீஞ்சூர் ஒன்றியத்தில், நெல், வேர்க்கடலை, கரும்பு உள்ளிட்டவைகள் பயிரிடப்பட்டு வந்தன. ஆட்கள் பற்றாக்குறையால், வேர்க்கடலை பயிரிடுவதையும், ஆலைகளில், 'கட்டிங் ஆர்டர்' கிடைக்காமல், கரும்பு பயிரிடுவதையும் விவசாயிகள் தவிர்த்தனர்.நெல் சாகுபடி செய்ய, நடவுக்கும் அறுவடைக்கும் இயந்திரங்கள் உள்ளதால், விவசாயிகள் தொடர்ந்து நெல்லை பயிரிட்டு வந்தனர்.இந்நிலையில் தற்போது, வேர்க்கடலை பச்சை பயறு, தர்பூசணி உள்ளிட்டவைகளை, அப்பகுதி வாசிகள் இயந்திரம் மூலம் விதைக்கும் புதிய முயற்சியை மேற்கொண்டு உள்ளனர். இயந்திரத்தால், சீரான இடைவெளியில், நேர்த்தியாக விதைக்கப்படுவதால், அதிக மகசூல் கிடைக்கும் என, கூறப்படுகிறது.

இதுகுறித்து, பொன்னேரி, சின்னகாவணம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகள் கூறியதாவது:உழவுப் பணிகளை மேற்கொள்ள மூன்று பேர், விதை பருப்பு போட, ஒன்பது பேர் என, ஒரு ஏக்கருக்கு, 12 பணியாட்கள் தேவை. இயந்திரத்தை பயன்படுத்தி விதைப்பதால், ஒரே ஒரு பணியாளர் போதுமானதாக உள்ளது. இயந்திரத்தில் விதைத்தால், சீரான இடைவெளியில் வேர்க்கடலை பயிர் வளரும். அதனால், போதிய வெளிச்சம் கிடைத்து நன்கு வளரும். களை எடுக்கும் பணிகளும் எளிதாக இருக்கும். இதனால், இம்முறை இயந்திரம் மூலம் வேர்க்கடலை விதைத்துள்ளோம்.இவ்வாறு அவர்கள் கூறினர்.

**ரோஜா பூங்காவில் கவாத்து பணி**

ஊட்டி: ஊட்டி ரோஜா பூங்காவில், கவாத்துப்பணி துவங்கியது.

ஊட்டியில், வரும் ஏப்ரல், மே மாதம் துவங்கவுள்ள கோடை சீசனை முன்னிட்டு, ஊட்டி ரோஜா பூங்காவை தயார்படுத்தும் பணிகள் துவங்கியுள்ளன. ஊட்டி ரோஜா பூங்காவில் உள்ள, 4,000க்கும் மேற்பட்ட ரோஜா செடிகளை கவாத்து செய்யும் பணி நேற்று துவங்கியது. மாவட்ட கலெக்டர் சங்கர் துவக்கி வைத்து கூறுகையில், "கவாத்து செய்யப்படும் ரோஜா செடிகளில், ஏப்ரல் மாதம் பூக்கள் பூக்கும்," என்றார். நிகழ்ச்சியில், மாவட்ட தோட்டக்கலை துறை இணை இயக்குனர் மணி, துணை இயக்குனர் சுப்ரமணியம், ரோஜா பூங்கா உதவி தோட்டக்கலை இயக்குனர் மீராபாய் உட்பட பலர் பங்கேற்றனர்.

**இயந்திர நடவு பழநி முதலிடம்**

பழநி:ஒவ்வொரு ஆண்டும் பழநிபகுதியில் மட்டும் 5,750 எக்டர் பரப்பளவில் நெல்சாகுபடி செய்யப்படுகிறது. இதற்காக 10 சதவீதம் அரசு மானியம் வழங்கப்படுகிறது. இவ்வாண்டு பழநியில் ரூ.15 லட்சம் செலவில், 1250 ஏக்கர் பரப்பளவில் இயந்திரமுறையில் நெல்சாகுபடி செய்து மாவட்டத்தில் முதலிடத்தில் உள்ளது.

**மூணாறில் கூரை பூக்கள் விற்பனை ஜோர்**

மூணாறு: மூணாறைச் சுற்றிலும் உள்ள தேயிலைத் தோட்டங்களில் நான்கு தலைமுறைகளாக தமிழர்கள் தொழிலாளர்களாக வேலை செய்து வருகின்றனர்.இவர்கள் தீபாவளி, பொங்கல் உட்பட தமிழகத்தில் கொண்டாடப்படும் பண்டிகைகளை,அவ்வழக்கப்படி கொண்டாடி வருகின்றனர். இதற்கு வசதியாக தொழிலாளர்களுக்கு நிர்வாகம் விடுமுறை அளித்து வருகிறது. நாளை பொங்கல் பண்டிகை கொண்டாடுவதற்கு தொழிலாளர்கள் தயாராக உள்ளனர்.ஆகவே அதை

தித்திப்புடனும், மங்களகரமாகவும் கொண்டாடுவதை எடுத்துக் காட்டும் வகையில் கரும்பு, மஞ்சள் செடி போன்றவை தமிழகத்தில் இருந்து கொண்டு வரப்பட்டு விற்கப்படுகின்றன.

தவிர கூரை பூக்கள் பெரும் அளவில் கொண்டு வரப்பட்டு விற்பனை களை கட்டியுள்ளது.ஒரு சிறிய கட்டு ரூ.10க்கு விற்கப்படுகிறது.இவற்றை தொழிலாளர்கள் ஆர்வமுடன் வாங்கிச் செல்கின்றனர்.

**இலவச ஆடுகள் வழங்கும் விழா**

முதுகுளத்தூர்: வளநாடு ஊராட்சியில் அரசு சார்பில் இலவச ஆடுகள் வழங்கும் விழா ஊராட்சி தலைவர் தேவி தலைமையில் நடந்தது. முதுகுளத்தூர் வட்டார கால் நடை டாக்டர் ரவிச்சந்திரன் முன்னிலை வகித்தார். 51 பயனாளிகளுக்கு தலா 4 ஆடுகள் வழங்கப்பட்டன

**விவசாயிகளுக்கு டிராக்டர் வழங்கல்**

மானாமதுரை: மானாமதுரையில் வேளாண் துறை சார்பில் விவசாயிகளுக்கு மானிய விலையில் டிராக்டர்கள் வழங்கப்பட்டது.விவசாயிகளுக்கு வழக்கமாக வேளாண் பொறியியல் துறை மூலம் டிராக்டர்கள்,பவர் டில்லர்கள், ஸ்பிரேயர்கள்,உழவு கருவிகள் மான்ய விலையில் வழங்கப்பட்டன. இதற்காக சிறு,குறு விவசாயிகள் பொறியியல் துறையில் பதிவு செய்ய வேண்டும். முன்னுரிமை அடிப்படையில் விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்பட்டன. தற்போது மாவட்டத்திலேயே முதன் முறையாக வேளாண் துறை சார்பில் பதிவு செய்த ஒரு சில வருடங்களிலேயே டிராக்டர்கள் மானிய விலையில் வழங்கப்படுகின்றன. சிவகங்கை மாவட்டம் மானாமதுரைவட்டாரத்தில் மணக்குளம் பொட்டையம்மாள், கட்டிக்குளம் வீரசேகரன்,கீழபிடாவூர் சந்திரன் ஆகியோருக்கு டிராக்டர் வழங்கப்பட்டுள்ளது. டிராக்டர் விலை ரூ.6.50 லட்சம்.இதில் மானியம் ரூ.1.25 லட்சம் போக மீதி தொகையை செலுத்தி டிராக்டர்கள்

வழங்கப்பட்டன.விழாவிற்கு மானாமதுரைஒன்றிய சேர்மன் மாரிமுத்து,வேளாண் உதவி இயக்குநர் மூர்த்தி,வேளாண் அலுவலர் மலர்விழி கலந்து கொண்டனர்.

**கரும்பு வரத்து குறைவு ஒரு கட்டு விலை ரூ.300**

சிவகங்கை: சிவகங்கை மார்க்கெட்டிற்கு கரும்பு வரத்து குறைவாக உள்ளது. ஒரு கட்டு (10 கரும்பு) ரூ.300 க்கு விற்கப்பட்டது. சிவகங்கையில் நேற்று வாரச்சந்தை நடைபெற்றது. நாளை பொங்கல் பண்டிகையை முன்னிட்டு வீடுகளில் பொங்கல் வைப்பதற்கு தேவையான பொருட்களை வாங்க,நேற்றே ஏராளமான பெண்கள் ஆர்வம் காட்டினர். மண் பானைகள் அதிகளவில் விற்பனைக்கு வந்திருந்தன. சிறிய பானை 60 ரூபாய்க்கும் பெரிய பானை 200 ரூபாய்க்கும் விற்றது. இந்த ஆண்டு சந்தைக்கு கரும்பு குறைந்த அளவே விற்பனைக்கு வந்திருந்தன.10 எண்ணிக்கை கொண்ட ஒரு கட்டு 300 ரூபாய்க்கு விற்கப்பட்டது.

மலம்பட்டி கரும்பு வியாபாரி ராஜா கூறுகையில்,"" மேலூர் கரும்பு என்றால் அதற்கு ஒரு தனி ருசி உண்டு. ஒரு கட்டு கரும்பை 300 ரூபாய்க்கு விற்கிறோம். கடந்த ஆண்டு பொங்கல் தினத்தன்று அனைத்து ஊர்களிலும் கரும்பு விற்று தீர்ந்து விட்டது. மாட்டு பொங்கல் தினத்தன்று கரும்புக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டது. ஒரு கட்டு கரும்பு 700 ரூபாய் வரை விலைபோனது. இந்த ஆண்டு ஜல்லிக்கட்டுக்கு தடை விதிக்கப்பட்டு இருப்பதால் மாட்டு பொங்கல் விறுவிறுப்பாக இருக்காது. கடந்த ஆண்டு போல் கரும்பில் அதிக லாபம் கிடைக்க வாய்ப்பில்லை. இந்த ஆண்டு கரும்பு வரத்தும் குறைவாகவே உள்ளது. பொங்கலுக்கு பிறகு வர இருக்கும் தைப்பூசத்திருவிழா, மகா சிவராத்திரி, கோயில்களில் நடைபெறும் பங்குனி பொங்கல் திருவிழாக்களுக்கு கரும்பு கிடைப்பது அரிது தான். அப்போது விலை சற்று அதிகரிக்க வாய்ப்புள்ளது," என்றார்.

**மீன்பாசி ஏலம் ஒத்திவைப்பு**

ராஜபாளையம்:ராஜபாளையம் தாலுகாவில் பொதுப்பணித்துறையை சேர்ந்த கண்மாய்கள் 51 உள்ளன. இக்கண்மாய்களில் மீன்பாசி ஏலம் கடந்த சில நாட்களாக நடந்து வருகிறது.

ஆள் நடமாட்டம் இல்லாத பொதுப்பணித்துறை அலுவலக ரோட்டில் கட்சியினர், வாகனங்கள் போக்குவரத்து இருந்தன. நேற்று திருச்சாலூர், கடம்பன்குளம், மருங்கூர் கண்மாய் உட்பட எட்டு கண்மாய்களுக்கு மீன்பாசி ஏலம் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட நிலையில், மூன்று கண்மாய்களுக்கு மட்டும் நேற்று ஏலம் நடந்தது. வாகைகுளம், களத்தூர், கண்நிறைந்தான்குளம், புதுக்குளம், பூவாணிகுளம் போன்ற கண்மாய்களின் ஏலம் ஒத்தி வைக்கப்பட்டது.

இதனால் சலசலப்பு ஏற்பட்டது. பொதுப்பணித்துறை அதிகாரியிடம் கேட்டபோது, "நிர்வாக காரணங்களுக்காக ஏலம் ஒத்தி வைக்கப்பட்டது," என்றார்.

இன்றைய வேளாண் செய்திகள்

**விவசாயிகளுக்கு குறைந்த பிரீமியத்தில் பயிர்காப்பீடு**



புதுடெல்லி: குறைந்த பிரீமியத்தில் விவசாயிகளுக்கு பயிர் காப்பீடு அளிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இதன்படி மொத்த பிரீமிய தொகையில் 2 சதவீதம் மட்டும் விவசாயிகள் செலுத்தினால் போதும். தொடர்ந்து கடந்த சில ஆண்டுகளாக வறட்சியால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதற்கு தென்மேற்கு பருவமழை பொய்த்ததே காரணமாக கூறப்படுகிறது. இதையடுத்து விவசாயிகளுக்கு உதவும் வகையில் குறைந்த பிரீமியத்தில் பயிர் காப்பீடு வசதியை அளிக்க மத்திய அரசு முடிவெடுத்துள்ளது. இது இந்த ஆண்டு தொடங்கும் கரீப் பருவத்தில் ( ஜுலை-அக்டோபர்) அறிமுகப்படுத்தப்பட உள்ளது. அப்போது தென்மேற்கு பருவமழை காலமாகும். பிரதமர் பசல் பீமா திட்டம் என பெயரிடப்பட்டுள்ள இதற்கு மத்திய அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது. புதிய முறை காரணமாக தேசிய வேளாண் காப்பீடு

திட்டம் மற்றும் திருத்தி அமைக்கப்பட்ட வேளாண் காப்பீடு திட்டமும் ஆகிய இரண்டும் விலக்கி கொள்ளப்படும். இதற்கு மாற்றாக ரூ.17,600 கோடி மதிப்பிலான இந்த பசல் பீமா திட்டம் கொண்டுவரப்படுகிறது. இதில் ரூ.8,800 கோடியை மத்திய அரசும் இதே அளவுக்கும் மாநில அரசும் தரும். உணவு தானியங்கள், எண்ணெய் வித்துகளுக்கு பிரீமியம் 1.5 முதல் 2 சதவீதமாக இருக்கும். தோட்டக்கலை மற்றும் பருத்திக்கு ரபி மற்றும் கரீப் பயிர் பருவத்தில் இது 5 சதவீதமாக இருக்கும் என தெரிகிறது. ரபி பயிர் பருவ ( அக்டோபர் முதல் மார்ச் வரை) உணவு தானியங்களுக்கும் எண்ணெய் வித்துகளுக்கு 1.5 சதவீத பிரீமியமும், கரீப் பயிர் பருவ காலத்தில் இது 2 சதவீதமாகவும் இருக்கும். உதாரணமாக, உணவு தானியம் எண்ணெய் வித்துக்களுக்கு காப்பீடு கட்டணம் ரூ.1,000 என்றால் விவசாயிகள் ரூ.20 செலுத்தினால் போதும். இதுபோல் தோட்டக்கலை மற்றும் பருத்திக்கு ரூ.1,000 பிரீமியம் இருக்கும் பட்சத்தில் ரூ.50 செலுத்தினால் போதும். இப்போது காப்பீடு வசதி 25 சதவீதம் முதல் 27 சதவீத பயிர்களுக்கு மட்டுமே கிடைக்கிறது. இதை இருமடங்காக உயர்த்தி 48 கோடி ஏக்கர் பரப்பில் பயிரிடப்பட்டுள்ள பயிர்களுக்கு காப்பீடு வசதி கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும். மாநிலத்தில் இந்த பயிர்கடன் வசதியை ஒரு நிறுவனம் மட்டுமே அளிக்கும். இதுகுறித்து மத்திய விவசாயத்துறை அமைச்சர் ராதாமோகன்சிங் கூறுகையில், ''இந்த திட்டத்துக்கான அரசு மானிய உச்ச வரம்பு இல்லை. விவசாயிகள் செலுத்தியது போக மீதமுள்ள பிரீமியம் 90 சதவீதமாக இருந்தாலும் அரசு செலுத்தும்'' என்றார்.

**விவசாயிகளுக்கு மத்திய அரசின் பொங்கல் பரிசு: பிரதமர் மோடி**

குறைந்த பிரீமியத்தில் அளிக்கப்படும் இந்த பயிர் காப்பீடு திட்டத்தால் விவசாயிகள் பலன் பெறுவார்கள் என்று பிரதமர் நரேந்திரமோடி

தெரிவித்தார். மத்திய அமைச்சரவை ஒப்புதலுக்கு பிறகு ட்விட்டரில் இதுகுறித்து தெரிவித்துள்ள நரேந்திர மோடி, 'பொங்கல், லோஹ்ரி (பஞ்சாப்பில் கொண்டாடப்படுவது) மற்றும் பிஹூ (அசாமில் கொண்டாடப்படுவது)

பண்டிகை பரிசாக மத்திய அரசு இந்த பயிர் காப்பீட்டை வழங்கியுள்ளது. இந்த புதிய காப்பீடு திட்டம் விவசாயிகளுக்கு உரிய பலனை அளிக்கும் என்ற நம்பிக்கை உள்ளது. மொபைல் போன் போன்ற தொழில்நுட்ப வசதி பயன்பாடு, இழப்பீடு பற்றி விரைந்த மதிப்பீடு ஆகியவற்றுக்கு இது உதவும். இந்த திட்டத்தில் சேருவதும் எளிமையானதுதான்'' என்று கூறியுள்ளார்.

## ஆற்காடு அருகே இயந்திரத்தால் நெல் நடவு செய்யும் பணி வேளாண் துணை இயக்குநர் ஆய்வு

ஆற்காடு, : ஆற்காடு அருகே இயந்திரம் மூலம் நெல் நடவு செய்யும் பணியை வேளாண்மை துணை இயக்குநர் பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஆற்காடு அடுத்த புன்னப்பாடி கிராமத்தில் விவசாயி சிவக்குமார் பண்ணையில் இயந்திரம் மூலம் நெல் நடவு செய்ய டிரே நாற்றங்கால் அமைக்கப்பட்டுள்ளது. 100 ஏக்கர் பரப்பளவில் இயந்திரம் மூலம் நெல் நடவு செய்ய ஒரே இடத்தில் நாற்றங்கால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்த நாற்றங்கால் பராமரிப்பு பணியையும், நெல் நடவு செய்யும் பணியையும் வேலூர் வேளாண்மை துணை இயக்குநர் சிவக்குமார் சிங் நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது, இயந்திரம் மூலம் நடவு செய்வதால் விதை அளவு குறைவதுடன், கூலிஆட்கள் பற்றாக்குறை நீங்குகிறது. பயிர் அதிக தூர் வெடித்து காற்றோட்டம், சூரிய ஒளி கிடைப்பதுடன், உரம் மற்றும் பூச்சி மருந்து தெளிப்பதற்கு வழிவகை செய்கிறது. மேலும் கோனோ களை எடுக்கும் கருவி கொண்டு களை எடுப்பதன் மூலம் விவசாயிகளுக்கு செலவு குறைகிறது என்று கூறினார். மேலும் அனைத்த விவசாயிகளும் இயந்திரம் மூலம் நடவு செய்ய வேண்டுகோள் விடுத்தார். அதனை

தொடர்ந்து லாடவரம் கிராமத்தில் நடவு செய்யப்பட்டுள்ள இயந்திர நெல் நடவு வயல்களை பார்வையிட்டார். அப்போது, ஆற்காடு வேளாண்மை உதவி இயக்குநர் சு.பேபிபர்வதம், உதவி வேளாண்மை அலுவலர் வினோத்குமார், முன்னோடி விவசாயிகள் உதயசங்கர், அரிபாபு, ராஜேந்திரன் ஆகியோர் உடனிருந்தனர். படவிளக்கம். 004 ஆற்காடு அடுத்த புன்னப்பாடியில் ெநல் இயந்திரம் மூலம் நெல்நடவு செய்ய பராமரிக்கப்பட்டு வரும் நாற்றங்காலை வேளாண்மை துணை இயக்குநர் சிவக்குமார் சிங் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன், வேளாண்மை உதவி இயக்குநர் சு.பேபிபர்வதம்.

**தா.பழூர் வட்டாரத்தில் இறவை நிலக்கடலைக்கு மானியத்தில் நல உதவி விவசாயிகளுக்கு அழைப்பு**

அரியலூர், : தா.பழூர் வட்டாரத்தில் இறவை நிலக்கடலைக்கு மானியத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட இருப்பதால் விவசாயிகள் பயன்பெறுமாறு வட்டார வேளாண் அதிகாரி தெரிவித்துள்ளார். அரியலூர் மாவட்டம் தா.பழூர் வட்டாரத்தில் கடலை இறவை விதைப்பு தற்போது நடைபெற்று வருகிறது. டிராக்டரில் பொருத்தப்பட்ட கொரு கலப்பை, நாள் ஒன்றுக்கு 7 ஏக்கர் வரை விதைப்பு செய்யலாம். இதன் மூலம் விதைப்பு செய்வதால் ஆகும் செலவு கணிசமாக குறைகிறது. தேசிய வேளாண்மை வளர்ச்சித்திட்ட எண்ணெய்வித்து இயக்கத்தில் கொரு கலப்பை மூலம் கடலை விதைப்பு செய்யும் விவசாயிகளுக்கு ஒரு எக்டருக்கு ரூ.1000 மானியமாக வழங்கப்படுகிறது. எனவே கடலை விதைப்பு செய்யும் விவசாயிகள் இந்த திட்டத்தை பயன்படுத்தி கொள்ளலாம். இதற்கு பகுதி உதவி வேளாண் அலுவலரிடம் தகவல் தெரிவித்து விதைப்பு செய்யும்போது புகைப்படம் எடுத்து சிட்டா அடங்கலுடன் விண்ணப்பிக்க வேண்டும். மேலும் கடலை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு தேசிய வேளாண் வளர்ச்சித்திட்டம் எண்ணெய் வித்துக்கள் திட்டத்தின்கீழ் திரவ நுண்ணுயிர்கள் 50 சத மான்யத்தில் வழங்கப்படுகிறது. இதனை எக்டருக்கு ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளித்தோ அல்லது மக்கிய எருவுடன் கலந்து தெளித்தோ

பயன்படுத்தினால் மண்ணில் தழைச்சத்தும், மணிச்சத்தும் பயிருக்கு கிடைக்கும் நிலை உண்டாகும். எனவே இறவை நிலக்கடலைக்கு கொரு கலப்பையை பயன்படுத்தி மானிய உதவிகளை பெற்று பயனடையலாம். இத்தகவலை வட்டார வேளாண் இணை இயக்குனர் பழனிச்சாமி தெரிவித்துள்ளார்.

## பருத்திக்கு இந்தாண்டு நல்ல விலை கிடைக்கும் விழிப்புணர்வு முகாமில் அதிகாரி தகவல்

பெரம்பலூர், : பருத்தி விவசாயிகளுக்கான விழிப்புணர்வு முகாம் பெரம்பலூர் அடுத்த வல்லாபுரம் பிரிவு பாதையிலுள்ள வேளாண் அறிவியல் மைய பயிற்சி அரங்கில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் ரோவர் கல்வி மற்றும் சமூக நல நிறுவனங்களின் தாளாளர் வரதராஜன் விவசாயிகளுக்கு இடுபொருட்கள் வழங்கி பேசியதாவது: பருத்தி சாகுபடியில் ரசாயன உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகளின் தெளிப்பைக் குறைத்து தொழு உரம், மண்புழு உரம், இயற்கை பூச்சிக் கொல்லிகளான வேம்பு சார்ந்த பூச்சிக் கொல்லி மருந்துகளை பயன்படுத்துவதனால் மண்ணின் தரம் பாதுகாக்கப்படுவதோடு குறைந்த செலவில் அதிக மகசூலுடன் நிறைந்த வருமானமும் பெறமுடியும் என்றார். இந்திய பருத்திக் கழக கிளை மேலாளர் ஜெயக்குமார் பேசுகையில், பெரம்பலூர் மாவட்டத்தில் விளையும் பருத்தி பஞ்சுகள் நீண்ட இழை தரத்துடன் காணப்படுவதால் அதற்கு நல்ல விலை கிடைக்கும். தமிழ்நாட்டில் ஏற்பட்ட அதிக மழைப்பொழிவு, கர்நாடகாவில் ஏற்பட்ட வறட்சி, பஞ்சாப்பில் வெள்ளை ஈ தாக்குதல், குஜராத்தி—ில் இளஞ்சிவப்பு காய்ப்புழுவின் தாக்குதல் போன்ற காரணங்களால் இந்த ஆண்டு பருத்தி உற்பத்தி மிகவும் குறைவாகவே இருக்கும். அதனால் கடந்த 10 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு பருத்திக்கு இந்த ஆண்டு நல்ல விலை கிடைக்க வாய்ப்பு உள்ளது. எனவே, பருத்தி விவசாயிகள் பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் விற்பனை மையங்களில் விற்பனை செய்து அதிக லாபம் பெறலாம் என்றார்.

விழிப்புணர்வு நிகழ்ச்சியில் வேப்பந்தட்டை பருத்தி ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் கவிமணி, ஒருங்கிணைந்த உர நிர்வாகம் குறித்தும் வேளாண் அறிவியல் மைய பருத்தி திட்ட ஆராய்ச்சியாளர் சரவணன் ஒருங்கிணைந்த பூச்சி நிர்வாகம் குறித்தும் விளக்கினார். ரோவர் வேளாண் கல்லூரி முதல்வர் செல்வராஜன், தனி அலுவலர் ஜெபராஜ் ஆகியோர் வாழ்த்திப் பேசினர். இந்த நிகழ்ச்சியில் வயலப்பாடி, துங்கபுரம் மற்றும் சிறுகன்பூர் கிராமத்திலுள்ள 100க்கும் மேற்பட்ட பருத்தி விவசாயிகள் மற்றும் வேளாண் அறிவியல் மைய தொழில் நுட்ப வல்லுநர்கள், அலுவலர்கள், களப்பணியாளர்கள் ஆகியோர் உட்பட பலர் கலந்துகொண்டனர். முன்னதாக வேளாண் அறிவியல் மைய முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் (பொ) கதிரவன் வரவேற்றார். இந்திய பருத்திக் கழகத்தின் முதுநிலை பருத்திக்கொள்முதல் அலுவலர் வெங்கடாச்சலம் நன்றி கூறினார்.

தினத்தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**பால் கொள்முதல் 30 லட்சம் லிட்டரை எட்டியது இலவச கறவை மாடுகள் மூலம் தினசரி 80 ஆயிரம் லிட்டர் பால் கொள்முதல் ஆவின் நிர்வாக இயக்குனர் தகவல்**



சென்னை,

பொதுமக்களுக்கு தமிழக அரசு வழங்கிய இலவச கறவை மாடுகள் மூலம் 80 ஆயிரம் லிட்டர் பால் உள்பட தினசரி 30 லட்சம் லிட்டர் பாலை ஆவின் கொள்முதல் செய்கிறது.

இதுகுறித்து ஆவின் நிர்வாக இயக்குனர் சுனில் பாலிவால் கூறியதாவது:–

ஆவின் பால்பண்ணை

ஆவின் பால்பண்ணை மற்றும் உற்பத்தியை பெருக்குவதற்கு கடந்த 4½ ஆண்டுகளில் தமிழக அரசு அதிகபட்சமாக ரூ.593 கோடி நிதி ஒதுக்கியது. கடந்த 2010–2011–ம் ஆண்டு 20.67 லட்சமாக இருந்த பால் கொள்முதல், 2015–2016–ம் ஆண்டு 30 லட்சத்தை எட்டி உள்ளது. இதில் சென்னையில் மட்டும் 11.5 லட்சம் லிட்டர் பால் விற்பனை செய்யப்படுகிறது. இதனை 13.5 லட்சமாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதேபோல் கிராமங்களில் தொடக்க கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கையும் 11 ஆயிரத்து 839 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

தமிழக அரசு அறிவித்த இலவச கறவை மாடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ், ஆயிரம் கிராமங்களில் இருந்து தினசரி 80 ஆயிரம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது.

நவீனமையம்

அம்பத்தூர் பால்பண்ணையில் உள்ள பால்பொருட்கள் தயாரிக்கும் நிலையத்தில், தினசரி 3 ஆயிரம் லிட்டர் பாலில் இருந்து ஐஸ்கிரீம், 7ஆயிரம் 500 லிட்டர் பாலில் இருந்து மோர், தயிர், லஙசி, நெய், பட்டர் மில்க், வெண்ணெய், சாக்லேட், பாதாம் பவுடர் போன்ற பொருட்கள் மற்றும் 100 கிலோ பன்னீர் பட்டர் மசாலா, 1 டன் பால்கோவா, 60 கிலோ பால் பேடா, 750 கிலோ மைசூர்பாகு தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையம் ரூ.23 கோடியே 46 லட்சம் செலவில் நவீனமயமாக்கப்பட்டு வருகிறது. வரும் பிப்ரவரி 2–வது வாரத்தில் திறக்கப்படுகிறது.

அதேபோல் புதிதாக ரூ.9.9 கோடியில் அமைக்கப்பட்டு வரும் புதிய உற்பத்தி நிலையம் வரும் ஜூன் மாதம் திறக்கப்பட உள்ளது.

500 விற்பனை நிலையங்கள்

பால்பொருட்களை விற்பனை செய்ய சென்னையில் 500 விற்பனை நிலையங்கள் தொடங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில், 32 விற்பனை நிலையங்கள் தொடங்கப்பட்டு உள்ளன. அதேபோல் 100 பள்ளி, கல்லூரிகளில் திறக்க முடிவு செய்யப்பட்டதில் 28 கல்லூரிகளில் ஆவின் மையங்கள் திறக்கப்பட்டு உள்ளன.

இதுதவிர 32 ஆவின் கடைகள் திறக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதில் 24 இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், தற்போது 14 கடைகள் திறக்கப்பட்டு உள்ளன. பால் பவுடர் உள்பட பல்வேறு பால்பொருட்களின் உற்பத்தி அதிகரித்திருப்பதால், விலைகள் குறைக்கப்பட்டுள்ளன. அதேபோல் பால்பவுடர் அரை கிலோ வாங்கினால் அரை கிலோ இலவசம் என்ற சலுகையும் வழங்கப்படுகிறது.

<u>கொள்திறன் அதிகரிப்பு</u>

இதுதவிர கோவை மாவட்ட பால்பண்ணையின் கொள்திறனை 2 லட்சத்தில் இருந்து 5 லட்சமாகவும், மதுரை மாவட்ட பால்பண்ணை கொள்திறனை ரூ.14 கோடி மதிப்பில் 3 லட்சத்தில் இருந்து 5 லட்சமாகவும் மாற்றும் பணி நடந்து வருகிறது. அதேபோல் பெரம்பலூர் மாவட்டத்தில் ரூ.36.28 கோடி மதிப்பில் 1 லட்சம் கொள்திறன் கொண்ட புதிய பால்பண்ணை அமைக்கப்பட்டு வருகிறது.

விருகம்பாக்கத்தில் நவீன வசதிகளுடன் கூடிய ஆவின் பொருட்கள் விற்பனை மையத்தை முதல்–அமைச்சர் திறந்து வைத்தார். தொடர்ந்து அசோக் பில்லர், பெசன்ட்நகர், பாலவாக்கம், வண்ணான்துறை ஆகிய 4 இடங்களில் புதிய ஆவின் விற்பனை மையங்கள் வரும் பிப்ரவரி மாதம் தொடங்கப்பட உள்ளது. சோழிங்கநல்லூர் பால்பண்ணையில் ரூ.26 கோடி மதிப்பில் நவீனபால் உற்பத்தி செய்யும் மையம் அமைப்பதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிறது.இவ்வாறு அவர் கூறினார்.

**கோவை மார்க்கெட்டுகளில் பொங்கல் பொருட்கள் வாங்க குவிந்த பொதுமக்கள் ஒரு கரும்பு ரூ.50–க்கு விற்பனை**



கோவை

பொங்கல் பண்டிகை நாளை (வெள்ளிக்கிழமை) கொண்டாடப்பட உள்ள நிலையில் கோவை மார்க் கெட்டுகளில் பொங்கல் பொருட்கள் வாங்க பொதுமக்கள் குவிந்தனர். ஒரு கரும்பு ரூ.50–க்கு விற்கப்பட் டது. பூக்களின் விலை உயர்ந்து காணப்பட்டது.

<u>ஒரு கரும்பு ரூ.50–க்கு விற்பனை</u>

தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகை நாளை (வெள்ளிக்கிழமை) கொண்டாடப்படுகிறது. இதற்காக கோவை ராஜவீதியில் உள்ள தியாகி குமரன் மார்க்கெட், மேட்டுப்பாளையம் ரோட்டில் உள்ள எம்.ஜி.ஆர். மார்க்கெட், உக்கடம் காய்கறி மார்க்கெட், பூ மார்க்கெட்டுகளில் நேற்று பொங்கலுக்கு தேவை யான காய்கறிகள், கரும்பு, மஞ்சள் மற்றும் பூக்கள் விற்பனைக்காக குவித்து வைக்கப்பட்டு இருந்தது. பொங்கல் பொருட்களை வாங்க பொதுமக்கள் கூட்டம் அதிகமாக இருந்தது. மதுரை, மேலூர், திண் டுக்கல், சேலம், கோபி போன்ற இடங்களில் இருந்து கோவை மார்க்கெட்டுகளுக்கு, கரும்புக்கட்டுகள் லாரிகள் மூலம்

கொண்டு வரப்பட்டன. ஒரு கரும்பின் விலை ரூ.50 முதல் ரூ.70–க்கு விற்பனையானது. 10 கரும்புகள் கொண்ட ஒரு கட்டு தரத்திற்கு ஏற்ப ரூ.500 முதல் ரூ.700 வரை விற்பனையானது. 20 கரும்புகள் கொண்ட ஒரு கட்டு ரூ.1000 முதல் ரூ.1200 வரை விற்பனையானது. ஒரு ஜோடி மஞ்சள் குலை ரூ.40 முதல் ரூ.100 வரை விற்பனையானது. இவற்றை பொதுமக்கள் ஆர்வத்துடன் வாங்கி சென்றனர்.

<u>காய்கறிகள் விலை</u>

மேட்டுப்பாளையம், ஊட்டி, ஒட்டன்சத்திரம் உள்பட தமிழகத்தின் பல்வேறு இடங்களில் இருந்தும், கர்நாடக மாநிலம் மைசூர், அத்திப்பாலம் போன்ற இடங்களில் இருந்தும் காய்கறிகள் அதிக அளவில் விற்பனைக்காக கொண்டு வரப்பட்டிருந்தன. காய்கறிகளின் விலை (கிலோ) விவரம் வருமாறு:–

சிறுகிழங்கு– ரூ.30, சேம்பங்கிழங்கு –ரூ.40, கருணைக்கிழங்கு ரூ.40, முருங்கைக்காய் ரூ.120, கத்தரிக்காய்– ரூ.30, பீர்க்கங்காய்– ரூ.36, அவரை–ரூ.36, பீன்ஸ்–ரூ.40, கேரட்–ரூ.50, கோஸ்–ரூ.20, காலிபிளவர்– ரூ.40, சவ்சவ்–ரூ.20, பீட்ரூட்–ரூ.30, முள்ளங்கி– ரூ.20, புடலை– ரூ.16, சின்ன வெங்காயம்–ரூ.25, பெரிய வெங்காயம்– ரூ.20, உருளை– ரூ.16, மிளகாய்– ரூ.40, வெண்டை–ரூ. 40, தக்காளி ரூ.25–க்கும் விற்பனையானது.

<u>பூ– பொங்கல் பானை</u>

பனிப்பொழிவு காரணமாக பூக்களின் உற்பத்தி குறைவாக உள்ளது. இதனால் வெளிஇடங்கள் மற்றும் வெளிமாநிலங்களில் இருந்து கோவை மார்க்கெட்டுகளுக்கு வரும் பூக்களின் வரத்து குறைவாக இருந்தது. இதன் காரணமாக பூக்களின் விலை அதிகமாக இருந்தது. மதுரை மல்லி கிலோ ரூ.800 முதல் ரூ.1000, பெங்களூரு மல்லி கிலோ ரூ.280, செவ்வந்தி ரூ.160, வெள்ளைசெவ்வந்தி ரூ.180, ரோஸ் ரூ.160, காக்கடை ரூ.320, தாமரை ரூ.5–க்கும் விற்பனையானது.

மேலும் பெங்களூருவில் இருந்து பல்வேறு வண்ண ரோஜாப்பூக்கள் விற்பனைக்காக வந்து குவிந்துள்ளன. அதேபோல பொங்கல் பானைகளையும் பெண்கள் ஆர்வமுடன்வாங்கிச் சென்றனர்.

<u>பொதுமக்கள் ஆர்வம்</u>

பொங்கலையொட்டி கோவை தடாகம் சாலையில் உள்ள கமிஷன் மண்டிகளில் தூத்துக்குடி, திருச்சி, தஞ்சை ஆகிய இடங்களில் வாழைத்தார்கள் வந்துள்ளன. இதில், 250 பழங்கள் கொண்ட பூவன் வாழைத்தார் ரூ.300 வரை விற்பனையானது. கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு வாழைப்பழங்கள் விலை உயர்ந்து உள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர். பொங்கல் பொருட்கள் வாங்க பொதுமக்கள் அதிக எண்ணிக்கையில் குவிந்தனர். இதனால் மார்க்கெட்டுகளில் மக்கள் கூட்டம் அலைமோதியது.

**2–ம் போக புன்செய் பாசனத்துக்காக கீழ்பவானி வாய்க்காலில் தண்ணீர் திறப்பு அமைச்சர்–கலெக்டர் பங்கேற்பு**



பவானிசாகர்

2–ம் போக புன்செய் பாசனத்துக்காக கீழ்பவானி வாய்க்காலில் தண்ணீரை அமைச்சர் தோப்பு என்.டி.வெங்கடாசலம் மற்றும் மாவட்ட கலெக்டர் பிரபாகர் ஆகியோர் திறந்து விட்டனர்.

முதல்–அமைச்சர் ஜெயலலிதா உத்தரவு

ஈரோடு மாவட்டத்தின் முக்கிய அணையாக பவானிசாகர் அணை உள்ளது. இந்த அணையில் இருந்து 2–ம் போக புன்செய் பாசனத்துக்காக கீழ்பவானி வாய்க்காலில் தண்ணீர் திறந்துவிடக்கோரி அரசுக்கு, ஈரோடு மாவட்ட விவசாயிகள் கோரிக்கை விடுத்து வந்தனர்.

விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, பவானிசாகர் அணையில் இருந்து கீழ்பவானி வாய்க்காலில் 2–ம் போக பாசனத்துக்காக 13–ந் தேதி (நேற்று) தண்ணீர் திறந்து விடப்படும் என்று முதல்–அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டார்.

தண்ணீர் திறப்பு

இதைத்தொடர்ந்து பவானிசாகர் அணையில் இருந்து கீழ்பவானி வாய்க்காலில் தண்ணீர் திறந்து விடப்படும் நிகழ்ச்சி நேற்று மதியம் 2 மணிக்கு நடந்தது. நிகழ்ச்சியில் தமிழக சுற்றுச்சூழல் துறை அமைச்சர் தோப்பு என்.டி.வெங்கடாசலம், மாவட்ட கலெக்டர் பிரபாகர் ஆகியோர் மதகு பொத்தானை அழுத்தி, ஷட்டரை திறந்து வைத்தனர்.

இதைத்தொடர்ந்து அணையில் இருந்து தண்ணீர் சீறிப்பாய்ந்து கீழ்பவானி வாய்க்காலில் சென்றது. அப்போது வாய்க்கால் தண்ணீரில் அமைச்சர் உள்பட அனைவரும் மலர் தூவினர். முதல் கட்டமாக வினாடிக்கு 500 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டு உள்ளது. பின்னர் படிப்படியாக உயர்த்தப்பட்டு வினாடிக்கு 2 ஆயிரத்து 300 கன அடி தண்ணீர் திறந்து விடப்படும்.

1 லட்சத்து 3 ஆயிரத்து 500 ஏக்கர்

தண்ணீர் திறந்துவிடும்போது அணையின் நீர்மட்ட உயரம் 76.74 அடி ஆகும். அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 546 கனஅடியாக இருந்தது. பவானி ஆற்றுக்கு வினாடிக்கு 1,000 கனஅடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

கீழ்பவானி வாய்க்காலில் திறந்துவிடப்பட்ட இந்த தண்ணீர் மூலம் பிரதான வாய்க்காலின் இரட்டைப்படை மதகு மற்றும் சென்னசமுத்திரம் கிளைவாய்க்காலின் ஒற்றைப்படை மதகு பகுதிகளுக்கு உள்பட்ட 1 லட்சத்து 3 ஆயிரத்து 500 ஏக்கர் பரப்பளவிலான விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. வருகிற ஏப்ரல் மாதம் 18–ந் தேதி வரை கீழ்பவானி வாய்க்காலில் தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

இந்த நிகழ்ச்சியில் ஈரோடு செல்வக்குமார சின்னையன் எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் பி.ஜி.நாராயணன் (பவானி), எஸ்.எஸ்.ரமணீதரன் (அந்தியூர்), ஆர்.என்.கிட்டுசாமி (மொடக்குறிச்சி), பி.எல்.சுந்தரம் (பவானிசாகர்), மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் எஸ்.ஆர்.செல்வம், பவானிசாகர் ஒன்றியக்குழு தலைவர் வி.ஏ.பழனிச்சாமி, சத்தியமங்கலம் வடக்கு ஒன்றிய அ.தி.மு.க. செயலாளர் சி.என்.மாரப்பன், பவானிசாகர் பேரூராட்சி தலைவர் வெங்கடாசலம், துணைத்தலைவர் செல்வம், பவானிசாகர் பொதுப்பணித்துறை என்ஜினீயர்கள் திருச்செந்தூர் வேலன், ராஜு, விவசாய சங்க பிரதிநிதிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**பொங்கல் பண்டிகையையொட்டி கரும்பு அறுவடை பணிகள் தீவிரம் விலை உயர்வால் விவசாயிகள் மகிழ்ச்சி**



ஈரோடு

பொங்கல் பண்டிகையையொட்டி கரும்பு அறுவடை பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. விலை உயர்வால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

கரும்பு அறுவடை

பொங்கல் பண்டிகை என்றாலே முதலில் நினைவுக்கு வருவது தித்திக்கும் கரும்புகள் தான். சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் கரும்புகளை விரும்பி சாப்பிடுவார்கள். பொதுமக்கள் பொங்கல் வைக்கும்போது கரும்புகளையும் வைத்து வழிபடுவது வழக்கம்.

பொங்கல் பண்டிகை நாளை (வெள்ளிக்கிழமை) கொண்டாடப்படுகிறது. விழாவையொட்டி செங்கரும்பு அறுவடைக்கான பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. ஈரோடு பி.பி.அக்ரஹாரம் அருகில் உள்ள சமயசங்கிலி பகுதியில் 200–க்கும் மேற்பட்ட ஏக்கர் நிலப்பரப்பில் கரும்பு

சாகுபடி செய்யப்பட்டு உள்ளது. தற்போது கரும்பு அறுவடைக்கான பணியில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

<u>விலை உயர்வு</u>

இதுகுறித்து விவசாயி ஒருவர் கூறும்போது, ‘‘பொங்கல் பண்டிகையையொட்டி கடந்த சில நாட்களுக்கு முன்பு கரும்பு அறுவடை தொடங்கிவிட்டது. இருந்தாலும் விழாவிற்கு 2 நாட்களுக்கு முன்புதான் அதிகமான விவசாயிகள் கரும்புகளை அறுவடை செய்கின்றனர். ஈரோடு, கோவை, சேலம், நாமக்கல், கரூர், கிருஷ்ணகிரி, திருப்பூர் உள்ளிட்ட மாவட்டங்களை சேர்ந்த வியாபாரிகள் வந்து கரும்புகளை வாங்கி செல்கின்றனர். கடந்த 2 மாதங்களுக்கு முன்பு நல்ல மழை பெய்ததால் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படவில்லை. இதனால் எதிர்பார்த்ததை விட சிறந்த மகசூல் கிடைத்து உள்ளது. ரேஷன் கடைகளில் பொங்கல் பரிசாக கரும்பு வழங்கப்படும் என்று தமிழக முதல்–அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டு உள்ளார். சமயசங்கிலி பகுதியை சேர்ந்த விவசாயிகள் பலர், தங்களது நிலங்களில் அறுவடை செய்த கரும்புகளை அரசுக்கு வழங்கி உள்ளனர். எனவே கரும்புக்கான தேவை அதிகரித்து இருப்பதால் விலையும் உயர்ந்து உள்ளது.’’, என்றார்.

கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு கரும்பின் விலை உயர்ந்து இருப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

**பொங்கல் பண்டிகையையொட்டி கரூரில் வாழைத்தார்-செங்கரும்பு விற்பனை தீவிரம்**



பொங்கல் பண்டிகையையொட்டி கரூரில் வாழைத்தார்-செங்கரும்பு விற்பனை தீவிரம் அடைந்துள்ளது.

பொங்கல்பண்டிகை

தமிழர் திருநாளாம் பொங்கல் திருவிழா நாளை (வெள்ளிக்கிழமை) கொண்டாடப்படுகிறது. பொங்கல் பண்டிகை என்றாலே, முதலில் நினைவுக்கு வருவது செங்கரும்பு, வாழைப்பழம். வீடுதோறும் பொங்கலிட்டு செங்கரும்பு, வாழைப்பழம், மஞ்சள்கொத்து, காய்கறிவகைகள் உள்ளிட்டவைகளை படையலிட்டு சூரியபகவானை வழிபடுவார்கள். இதையொட்டி கரூரில் பொங்கல் பொருட்கள் வாங்குவதற்காக பொதுமக்கள் கடைவீதிகளில் குவியத்தொடங்கியுள்ளனர். கரூர் காமராஜ் மார்க்கெட்டிற்கு பூவன் வாழைத்தார்கள் விற்பனைக்காக குவிந்துள்ளன. நேற்று ஒரு பூவன் வாழைத்தார் ரூ.500 முதல் ரூ.570 வரை விற்பனை ஆனது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

ஆனால் வாழைத்தார் வரத்து குறைவாக இருந்ததாக வியாபாரிகள்

கூறினர். மேலும் அவர்கள் கூறும்போது, கரூர் காமராஜ் மார்க்கெட்டில் 4 பேர் வாழைத்தார் ஏல மண்டி கடை வைத்து உள்ளோம். இங்கு ஒவ்வொரு ஆண்டும் பொங்கல் பண்டிகையின் போது 20 ஆயிரம் வாழைத்தார்கள் வரை விற்பனைக்கு வரும். ஆனால் இந்த ஆண்டு மழையால் வாழைத்தார்கள் சேதம் அடைந்தன. இதனால் வரத்து குறைந்து இந்த ஆண்டு 10 ஆயிரத்திற்கும் குறைவான வாழைத்தார்களே விற்பனைக்கு வந்தன என்று கூறினர்.

செங்கரும்பு

இதே போன்று செங்கரும்பும் விற்பனைக்காக கரூர் நகராட்சி அலுவலகம் எதிர்புறம் உள்பட பல்வேறு இடங்களில் வைக்கப்பட்டு உள்ளது. அதன்படி ஒரு கரும்பு ரூ.50-க்கும், 10 கரும்பு கொண்ட ஒரு கட்டு கரும்பு ரூ.400-க்கும் விற்கப்படுகிறது. கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு ஒரு கரும்பின் விலை ரூ.10 அதிகரித்துள்ளது.. இதற்கு காரணம் அதிக விளைச்சல் இல்லை. இதனால் வரத்து குறைவாக உள்ளதால், விலை ஏற்றமாகி உள்ளது என்று வியாபாரி ஒருவர் கூறினார்.

மஞ்சள்கொத்து

இதே போன்று பொங்கல் வைக்கும் போது அந்த இடத்தில் மஞ்சள் கொத்து கண்டிப்பாக இடம் பெறும். இதற்காக கரூர் மார்க்கெட் உள்பட பல்வேறு பகுதியில் மஞ்சள் கொத்துக்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டு உள்ளன. அதன்படி ஒரு மஞ்சள் கொத்து ரூ.10 முதல் ரூ.20 வரை விற்பனை செய்யப்படுகிறது. இன்று போகி பண்டிகை கொண்டாடப்படுகிறது. போகி பண்டிகை தினத்தன்று காலையில் பொது மக்கள் தங்கள் வீடுகளில் உள்ள பழைய துணிகளை அப்புறப்படுத்துவார்கள். மேலும் அவரவர் தங்கள் வீடுகளில் 4 வேப்ப இலை, பூலப்பூ, ஆவாரம் பூ ஆகிய மூன்றையும் இணைத்து ஒவ்வொரு மூலையில் வைத்து காப்பு கட்டுவார்கள். இதற்காக இவைகளும் கரூர்

நகரில் பல்வேறு இடங்களில் விற்பனைக்கு வைக்கப்பட்டு உள்ளன. தற்போது கரூர் நகரில் பொங்கல் பண்டிகை களை கட்டத்தொடங்கி உள்ளது.

**பொங்கல் பொருட்கள் விற்பனை களைகட்டியது பூக்கள், வாழைத்தார் விலை உயர்வு**



நாகை ஏழைப்பிள்ளையார் கோவில் அருகே கரும்பு விற்பனை நடைபெற்ற போது எடுத்தபடம்.



நாகை பெரிய கடைத்தெருவில் ஒரு பெண் மஞ்சள், இஞ்சி கொத்துக்களை வாங்கியபோது எடுத்தபடம்.

நாகையில் பொங்கல் பொருட்களின் விற்பனை களை கட்டியுள்ளது. மேலும் பூக்கள், வாழைதார் விலை உயர்ந்துகாணப்படுகிறது.

பொங்கல்பண்டிகை

தமிழர்களின் பண்டிகைகளுள் முக்கியமான பண்டிகை பொங்கல் பண்டிகை. விவசாயிகள் பொங்கல் பண்டிகை அன்று புத்தாடை உடுத்தி புதுப்பானையில் பொங்கலிட்டு கொண்டாடுவார்கள். இந்த பொங்கல் பண்டிகையில் முக்கிய இடத்தை பிடித்து இருப்பது கரும்பு, மஞ்சள் கொத்து, வாழைப்பழம் தான். பொங்கல் பண்டிகையின்போது

புதுமணத்தம்பதிகளுக்கு சீர் வரிசையாக பொங்கல் வைப்பதற்கு தேவையான பொருட்கள், கரும்பு, மஞ்சள் கொத்து, வாழைத்தார் போன்றவைகளை கொடுப்பார்கள். பொங்கல்பண்டிகை நாளை (வெள்ளிக்கிழமை) கொண்டாடப்பட உள்ளது.இதையொட்டி நாகையில் ஆங்காங்கே கரும்பு, மஞ்சள், இஞ்சி கொத்துகள், மண் பானைகள், கலர் கோலபொடி உள்ளிட்ட பொருட் களை விற்பனை செய்யும் கடைகள் ஏராளமாக அமைக்கப்பட்டுள்ளன. மேலும், சனிக்கிழமை மாட்டு பொங்கல் பண்டிகை வருவதால் நெட்டி மாலைகள், பிளாஸ்டிக் பூ மாலைகள் விற்பனையும் களைக்கட்ட தொடங்கியுள்ளது.

மண்பானை

நாகையில் கரும்பு ஒரு கட்டின் விலை ரூ.350-க்கும் மேல் விற்கப்படுகிறது. அதேபோல் இஞ்சி, மஞ்சள் ஒரு கொத்து ரூ.25 முதல் விற்பனை செய்யப்படுகிறது. மேலும், பூக்கள் மற்றும் வாழைத்தார் விலை அதிகரித்து காணப்படுகிறது. இருப்பினும் மக்கள் விலையை பொருட்படுத்தாமல் பொருட்களை வாங்கி செல்கின்றனர். இதனால் நாகை பெரிய கடைத்தெருவில் கூட்டம் அலைமோதியது. இதேபோல் நாகூர், திருமருகல், திட்டச்சேரி, கீழ்வேளூர், வேளாங்கண்ணி, திருப்பூண்டி, கீழையூர், சிக்கல் உள்ளிட்ட அனைத்து பகுதிகளிலும் பொங்கல் பொருட்களின் விற்பனை களைக்கட்டியுள்ளது.

**கோழி தீவனத்தில் அதிக எரிசக்தி சேர்க்க வேண்டும் ஆராய்ச்சி நிலையம் தகவல்**

பனிக்காலம் முடியும் வரை கோழி தீவனத்தில் அதிக எரிசக்தி சேர்க்க வேண்டும் என வானிலை ஆராய்ச்சி நிலையம் சார்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

ஆராய்ச்சிநிலையம்

நாமக்கல் மாவட்டத்தில் இன்றும், நாளையும் நிலவும் வானிலை குறித்து கால்நடை மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் சார்பில் வெளியிடப்பட்டு உள்ள அறிக்கையில்கூறியிருப்பதாவது:- அடுத்த 2 நாட்கள் வானம் லேசான மேகமூட்டத்துடன் காணப்படும். மழை பெய்ய வாய்ப்பு இல்லை. காற்று மணிக்கு 3 கி.மீ. வேகத்தில் வடக்கு திசையில் இருந்து வீசும். வெப்பநிலையை பொறுத்த வரையில் அதிகபட்சமாக 89.6 டிகிரியாகவும், குறைந்தபட்சமாக 66.2 டிகிரியாகவும் இருக்கும். காற்றின் ஈரப்பதம் அதிகபட்சமாக 82 சதவீதமாகவும், குறைந்தபட்சமாக 48 சதவீதமாகவும் இருக்கும்.

எரிசக்தி

தற்போது பனிக்காலமாக இருந்தாலும், பகல் மற்றும் இரவு வெப்ப அளவுகள் அதிகரித்த நிலையிலேயே இருக்கும். இத்தகைய தட்பவெப்ப நிலையில் கோழிகளில் தீவன எடுப்பு கட்டுப்பாட்டுக்குள் இருக்கவே வாய்ப்பு உள்ளது. இருப்பினும் பனிக்காலம் முடியும் வரையில், தீவன எடுப்பை கட்டுப்படுத்தும் விதத்தில் தீவனத்தில் அதிக எரிசக்தி சேர்க்க வேண்டும். மேலும் உலர்ந்த மூலப்பொருட்களை கொண்டு தயாரிக்கும் தீவனம், உடனுக்குடன் தீவனத்தை பயன்படுத்துதல், மனைகளில் பக்கவாட்டில் படுதாவை கட்டுவது போன்ற உத்திகளை நல்ல முறையில் பின்பற்றி வர வேண்டும். பகல் வெளிச்ச நேரம் குறைவாக இருப்பதால், தீவனத்தில் வைட்டமின் டி3-ம், குஞ்சுகளுக்கு முதல் 10 நாட்களுக்கு

போதிய வெப்பமும் அளித்தல் வேண்டும். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுஉள்ளது.

**பொங்கல் பண்டிகையையொட்டி பூக்கள் விலை கிடுகிடு உயர்வு**



ஊட்டி

ஊட்டியில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு பூக்கள் விலை கிடுகிடுவென உயர்ந்துள்ளது. ஒரு கிலோ மல்லிகைப்பூ ரூ.1,400–க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதேபோல் ஒருஜோடி கரும்பு ரூ.100–க்கு விற்பனையாகிறது.

பொங்கல் பண்டிகை

தமிழர்களின் பண்டிகையான பொங்கல் பண்டிகை நாளை (வெள்ளிக்கிழமை) கொண்டாடப்பட உள்ளது. பொங்கல் பண்டிகையில் மறக்காமல் தித்திக்கும் கரும்பு இடம்பெறும். புதுமண தம்பதிகளுக்கு தலைப்பொங்கல் சீர்வரிசையாக கரும்புகள் வழங்கப்படும். இந்த நிலையில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு ஊட்டி நகரில்

விற்பனைக்காக கரும்புகள் குவித்து வைக்கப்பட்டு உள்ளன. ஒருஜோடி கரும்பு ரூ.100–க்கு விற்பனை செய்யப்படுவதால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு உள்ளனர்.

<u>விலை அதிகரிப்பு</u>

இது குறித்து வியாபாரிகள் கூறியதாவது:–

நீலகிரியில் கரும்பு விளைவிக்கப்படுவது இல்லை. பிற மாவட்டங்களில் இருந்துதான் கரும்பு இங்கு கொண்டு வரப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. மலைமாவட்டமாக உள்ளதால் கரும்புகளை மேட்டுப்பாளையத்தில் இருந்து ஊட்டிக்கு லாரி மூலம் கொண்டு வர அதிக செலவு பிடிக்கிறது.

மேலும் ஆட்கள் கூலி உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் கரும்பு விலை அதிகரித்து உள்ளது. 20 கரும்புகள் கொண்ட ஒரு கட்டு கரும்பு ரூ.600 முதல் ரூ.700 வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதனை வாங்கி சில்லறை வியாபாரிகள் ஒருஜோடி கரும்பை ரூ.100–க்கு விற்பனை செய்கின்றனர். இவ்வாறு அவர்கள் கூறினர்.

பொங்கலுக்கு பயன்படுத்தபடும் பூளைப்பூ, ஆவாரம் பூ கொண்ட ஒரு கட்டு ரூ.10–க்கும், மா இலைகள் ஒரு கட்டு ரூ.10 முதல் ரூ.15 வரையும் விற்பனை செய்யப்படுகிறது. பொருங

<u>பூக்கள் விலை கிடுகிடு உயர்வு</u>

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு பூக்கள் விலை கிடுகிடுவென உயர்ந்துள்ளது. குன்னூர் மார்க்கெட்டில் மல்லிகைப் பூ கடந்த ரூ.800–க்கு விற்கப்பட்டது. இந்த வாரம் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு ஒரு கிலோ மல்லிகைப்பூ ரூ.600 விலை உயர்ந்து ஆயிரத்து 400 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இதேபோல் சாமந்தி ரூ.80–ல் இருந்து ரூ.200 ஆகவும், ரூ.70–க்கு விற்பனையான துளசி 100 ரூபாயாகவும், ரோஜாப்பூ மாலை ரூ.150–ல் இருந்து ரூ.200 ஆகவும் விற்பனை செய்யப்படுகிறது.

**பொங்கல் பொருட்கள் விற்பனை மும்முரம்**



கும்பகோணத்தில் பொங்கல் பொருட்கள் விற்பனை மும்முரமாக நடைபெற்று வருகிறது. பொங்கல் பண்டிகை தமிழர்கள் திருநாளாம் பொங்கல் பண்டிகை நாளை(வெள்ளிக்கிழமை) கொண்டாடப் படுகிறது. அன்றைய தினம் பொதுமக்கள் குறிப்பாக விவசாயிகள் அதிகாலை எழுந்து குளித்து புத்தாடை உடுத்தி பாரம்பரிய முறைப்படி புதுப்பானையில் பொங்கலிட்டு தங்களுடைய குடும்பத்தினருடன் கொண்டாடி மகிழ்கின்றனர். பொங்கல் பண்டிகையின்போது சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் விரும்பி சுவைப்பது கரும்பு தான். மேலும் பொங்கல் பண்டிகையின்போது புதுமணத் தம்பதிகளுக்கு சீர் வரிசையாக பொங்கல் வைப்பதற்கு தேவையான பொருட்கள், கரும்பு, மஞ்சள் கொத்து, வாழைத்தார் போன்றவற்றை கொடுப்பது வழக்கம். பொங்கல்

பண்டிகைக்காக தங்களுடைய வயல்களில் விளைவிக்கப்பட்ட கரும்பு, மஞ்சள் கொத்துகள், வாழைத்தார்கள் போன்றவற்றை கும்பகோணம் மற்றும் தாராசுரம் அறிஞர் அண்ணா மார்க்கெட்டிற்கு நேற்று அதிகாலை முதலே விவசாயிகள் கொண்டு வந்திருந்தனர். மேலும் பொங்கல் வைப்பதற்கான மண் பானைகள் மற்றும் கலர் கோலப்பொடிகளும், பூஜை பொருட்களும் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன. விற்பனைமும்முரம்

இதில் கும்பகோணம் மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமங்களை சேர்ந்த பொதுமக்கள் கலந்து கொண்டு தங்களுக்கு தேவையான பொங்கல் பொருட்களை ஆர்வமுடன் வாங்கி சென்றனர். இதனால் நேற்று காலை முதல் மாலை வரை கும்பகோணம் மற்றும் தாராசுரம் அறிஞர் அண்ணா காய்கறி மார்க்கெட்டில் விற்பனை மும்முரமாக நடைபெற்றது. இதேபோல் பாபநாசம், திருவிடைமருதூர், பட்டீஸ்வரம், கபிஸ்தலம், திருப்பனந்தாள், அம்மாப்பேட்டை, மெலட்டூர், அய்யம்பேட்டை போன்ற பகுதிகளிலும் பொங்கல் விற்பனை மும்முரமாக நடைபெற்றன.